வாசிக்க: அப்போஸ்தலர் 2:36-47

***"இரட்சிக்கப்படுகிறவர்களைக் கர்த்தர் தினந்தோறும் சபையில் சேர்த்துக்கொண்டுவந்தார்" (அப் 2:47ஆ)***

புதிய விசுவாசிகளுக்கு ஆலோசனைகள் கொடுக்கப்படும்போது, அவர்கள் ஆவிக்குரிய சபையில் பங்குபெறவேண்டுமெனக் கூறப்படுகிறது. ஆனால் ஆவிக் குரிய சபையை அடையாளங்காண்பது எப்படி?

சபைகளைப் பொதுவாகப் பெந்தெகொஸ்தே சபைகள், பெந்தெகொஸ்தே யல்லாத சபைகளென்று பிரிக்கலாம். தூயாவியானவரின் அபிஷேகத்தை எப்படிப் புரிந்துகொள்கிறார்கள் என்பதில்தான் இங்கு முக்கிய வேறுபாடு. பெந்தெகொஸ்தே சபைகளெல்லாம் ஆவிக்குரிய சபைகளென்றும், மற்றவைகள் அப்படியல்ல என்றும் சொல்வது தவறு. திருமறையின் பாணியில் சொன்னால் ''ஆவிக்குரிய'' என்னும் பதம் ''மாம்சத்துக்குரிய'' அல்லது ''ஜென்ம சுபாவ'' என்னும் பதங்களுக்கே எதிர்மறை யாகும். எனவே ஆவிக்குரிய சபை என்றால் ஜென்ம சுபாவங்களற்ற சபை என்றே பொருள். ஒரு சபையை ''ஆவிக்குரியது,'' அல்லது அப்படியல்லாதது என நிர்ணயிப்பது ஆராதனை முறை, திருமுழுக்கு கொடுத்தல், நிர்வாக அமைப்பு எப்படி என்பதல்ல. குழுவாக அச்சபையின் குணம், உறுப்பினர்களின் வாழ்க்கைமுறை எப்படியுள்ளது என்பதே காரியம். ஆவியின் வரங்களனைத்தும் செயல்பட்ட கொரிந்து சபையைப் (1 கொரி 1:7; 14:12அ) பவுல் ''மாம்சத்துக்குரிய'' சபை என்றான் (1 கொரி 3:1-3). இன்றைய நிலையைப் பார்த்தால் ஆவிக்குரியதும், மாம்சத்துக்குரியதும் கலந்தே எல்லாச் சபைகளிலும் காணப்படுகின்றன; சதவீதம்தான் வித்தியாசம்.

சபைகளின் நிலைமை இப்படியிருந்தாலும் மறுபடி பிறந்த ஒவ்வொருவரும் வளருவதற்காக உள்ளூர்ச் சபை ஒன்றைத் தெரிந்துகொள்ளவேண்டும். அதில் எதிர்பார்க்கவேண்டியன—

1. அச்சபையில் திருமறையைக் கடவுளின் வார்த்தை என நம்பவேண்டும். அங்கு திடமான வேத போதனை இருக்கவேண்டும். அப்போதுதான் நாம் வளரமுடியும்.

2. உண்மையோடும் (அர்த்தத்தோடும்), ஆவியோடும் (ஆர்வத்தோடும்) வழிபடுதல் வேண்டும் (யோ 4:23,24).

3. அங்கு நல்ல உறவு இருக்கவேண்டும். ஒருவருக்கொருவர் உதவவேண்டும். தேவையிலிருப்போருக்கு நடைமுறையில் ஆதரவு தரவேண்டும் (யாக் 2:14-17).

4. தலைமைத்துவம் ஒரே நபர்மீது இராமல், பொறுப்புகள் பிரித்துக் கொடுக்கப் படும் சபையாக இருக்கவேண்டும்.

5. நற்செய்தி மற்றும் மிஷனரிப் பணிக்கு அதிமுக்கியத்துவம் தரப்படவேண்டும். சபை என்பது ஒரு சங்கிலியல்ல; தங்களுக்கு விருப்பமான நற்செய்திப் பணி நிறுவனங்களோடு இணைந்து செயல்பட சபை உறுப்பினர்களுக்கு விடுதலை இருக்க வேண்டும்.

தேவையான அத்தனை குணாதிசயங்களும் ஒரே உள்ளூர்ச் சபையில் இருப்பது அரிதாகையால் உங்கள் தரிசனத்தை விரிவாக்கவும், அறிவைப் பெருக்கிக் கொள்ளவும் பிற சபைகளுக்கும் சென்றுவாருங்கள். உலகளாவிய கிறிஸ்துவின் சபையில் நாமெல்லாரும் உறுப்புகளாய் இருக்கிறோம். அதிகமாய் எதிர்பார்த்து ஏமாந்துவிடாதீர்கள்; ஏமாந்துவிட்டால் அதிகமாய்ச் சோர்ந்துபோகாதீர்கள்!

CHURCH: FIRST ◂◂ FEB 19